# உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் முறைகேடுகளைக் குறைப்பதற்கான மற்றும் தடுப்பதற்கான விதிமுறைகள்

## (சம்பவக் கற்கைகளின் ஊடாக)

DRAFT

*ஆசியா நிலையம்*

Australian Aid

The Asia Foundation

பிரசுரிக்கப்பட்டது

*ஆசியா நிலையம்*, இலங்கை

முதலாம் பதிப்பு
© 2018, ஆசியா நிலையம்

ISBN :

நூலாசிரியர்
எச். ஜீ. சி. ஜயதிஸ்ஸ

அச்சிடப்பட்டது
கொழும்பு, இலங்கை

DRAFT

இவ் வெளியீடு பற்றி: இவ் வெளியீடு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் *ஆசியா நிலையம்* மூலம் நடைமுறைப்படுத்தப்படும் உப தேசிய ஆளுகைத் திட்டத்தின் (SNGP) கீழ் உருவாக்கப்பட்ட தொடர் அறிவுசார் படைப்புக்களின் ஒரு பகுதியாகும். உப தேசிய ஆளுகைத் திட்டமானது இலங்கையின் உப தேசிய நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கான மீளெழுச்சி, பிரஜைகள் உள்ளடக்கமும் பிரதிநிதித்துவமும் மற்றும் பிரச்சினைகளுக்கு நிவாரணமளித்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சோதனை மாதிரிகளின் நிறுவனமயமாக்கல் பற்றிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் சோதனைச் சீர்திருத்த வழிமுறைகள், செயல்முறைகள், கருவிகள் மற்றும் பிரதான அலுவலர்களின் திறனை கட்டியெழுப்பல் ஊடாக இலங்கையின் உப தேசிய ஆளுகைச் சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதற்காகவும் செயற்பட்டு வருகின்றது.

பொறுப்புக் கூறல்: இந்த வெளியீட்டில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் யாவும் நூ'லாசிரியரின் கருத்துக்களேயன்றி அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கருத்துக்கள் அல்ல.

உள்ளடக்கம்

*ஆசியா நிலையம்*

**உப தேசிய ஆளுகைத் திட்டம**

அறிமுகம்


1. நிதி முறைகேடுகள்..........................

1.1 களநிலையில் சேகரிக்கப்படும் பணம் தவறாகப் பாவிக்கப்படல்..................

1.2 இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள்....................

1.3 ஒழுங்கீனங்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்.

2. முறையற்ற ரீதியில் ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தொழில்களுக்கு பணம் வழங்கியிருத்தல்.................

2.1 இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள்....................

2.2 ஒழுங்கீனங்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்...........................

3. சொத்துக்களைத் தவறான முறையில் பாவித்தல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள்........................

3.1 இச்சம்பவத்தின் மூலம் இடம்பெற்றுள்ள தவறுகள் மற்றும் ஒழுங்கீனங்கள்..............

3.2 மேலே காட்டப்பட்டுள்ளவாறு ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்................................

4. சபைக்குச் சொந்தமான பொருட்கள் காணாமல் போதல்.................

4.1 அவதானிப்புத் தகவல்கள்...............

4.2 மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் மூலம் இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் தவறுகள்............................

4.3 இவ்வாறான ஒழுங்கீனங்கள் அல்லது முறைகேடுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கு எடுக்க வேண்டிய நடைவடிக்கைகள்......................


DRAFT

## *ஆசியா நிலையம்*

ஆசியா *நிலையமானது* ஆசியா வாழ் மக்களின் வாழ்வினையும் ஆசியாவின் அபிவிருத்தியினையும் மேம்படுத்தும் பிரயத்தனத்துடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஓர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகும். அறுபது ஆண்டுகால அனுபவம் மற்றும் ஆழ்ந்த உள்ளூர் நிபுணத்துவத்துடன் எமது பிராந்தியத்திற்கான பணியானது பின்வரும் 5 மையக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆவையாவன, உள்ளூராட்சியை வலுவாக்கல், மகளிர் வலுவூட்டல், பொருளாதார விரிவாக்கல் வாய்ப்புக்கள், சூழலுக்கேற்ற நெகிழ்வுத்தன்மையை அதிகரித்தல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

சேன். பிரான்சிஸ்கோவை (St. Franscisco) தலைமையகமாகக் கொண்டு 18 ஆசிய நாடுகளிலும் ஆசியா *நிலையமானது* ஒரு வலையமைப்பாகத் தொழிற்படுகிறது. ஆசியா *நிலையமானது* அபிவிருத்தியடைந்த பலதரப்பு மற்றும் இருதரப்பு முகவர்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் தனியாட்கள் மூலமாக நன்கொடைகளைப் பெற்று பொதுமக்களுடனும் தனியார் பங்குதாரர்களுடனும் தனது அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. 2017 இல், நாம் 83.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிகழ்ச்சிகளுக்கு நேரடி அனுசரணையாகவும் 8.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை பாடநூல் மற்றும் ஏனைய கல்வி சம்பந்தமான பொருட்களுக்காகவும் வழங்கியுள்ளோம்.

DRAFT

## உப தேசிய ஆளுகைத் திட்டம்

ஆசியா *நிலையத்தின்* உப தேசிய ஆளுகைத்திட்டமானது (SNGP) பொருளாதார வளர்ச்சி மற்றும் செயலாக்கம் வெளிப்படும் இரண்டாம் நிலை நகரங்களின் பொருளாதார மீள்தன்மையினை கட்டியெழுப்புவதற்காக ஆற்றல்மிக்க பொருளாதார மைய எண்ணக்கருத்தின் அடிப்படையில் ஒன்பது *மாகாணங்களினதும்* உள்ளூராட்சி திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நிதி மீள்தன்மை, பிரஜைகள் உள்ளடக்கத்துடன் கூடிய பிரதிநிதித்துவம், மற்றும் பிரச்சினைகள் நிவர்த்திசெய்தல் என்பவற்றிற்கான பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளை வெற்றிகரமான முறையில் நிறுவனமயமாக்கல் மூலம் உப தேசிய ஆளுகைத்திட்டத்தினை இலங்கையில் மேம்படுத்தலினை முக்கிய நோக்கமாக இத்திட்டம் கொண்டுள்ளது.

# அறிமுகம்

பணிக்குழு நிருவாகம், நிதி முகாமைத்துவம், சொத்துக்களின் பயன்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்ளக நிருவாகத்தை வலுப்படுத்தும் நோக்கில், ஆசிய மன்றத்தினால் கற்கை ரீதியான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது, இவ்வாராய்ச்சியில் அவதானிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப சில உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள் பற்றியும் குறிப்பிட்ட குறைபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கும் மற்றும் தடுப்பதற்கும் எடுக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய விபரங்கள் இவ்வெளியீட்டின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிராமிய பிரதேசங்களிலிருந்து நகரமயமாக்கப்பட்ட பிரதேசங்கள் வரை வியாபித்திருக்கும், மாநகரசபைகள், நகரசபைகள், மற்றும் பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி மன்றங்கள், மக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய குறிப்பிட்ட பணிப்பொறுப்பு மற்றும் தத்துவமளிக்கப்பட்டுள்ள கடமைகளினை ஆற்றுகின்ற நிறுவனக் கட்டமைப்புக்களாகும். மக்களால் நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினால் அமைக்கப்பட்ட இந்நிறுவனங்கள், மக்கள் செலுத்தும் வரிப்பணத்தின் மூலமே கொண்டு இயக்கப்படுகின்றன.

அதற்கேற்ப, உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வளங்கள் மற்றும் சொத்துக்களின் உரிமை மக்களுக்கு உரித்தாவதுடன், அச் சொத்துக்களினைப் பேணிப் பாதுகாக்கின்ற பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளிற்கு அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர்கள்/உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிற்குள்ள ஓரே நோக்கமும் பொறுப்பும் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்கள் தவறான பயன்பாட்டுக்குள்ளாகும் வழிகளை இல்லாதொழித்து அதனோடு தொடர்புடைய உள்ளக நிருவாகத்தை வலுப்படுத்துவாக அமைய வேண்டும்.

எச். ஜி. சீ. ஜயதிஸ்ஸ
ஆலோசகர் (சட்டம் மற்றும் உள்ளூராட்சி)

DRAFT

## 1. நிதி முறைகேடுகள்

### 1.1 களத்தில் சேகரிக்கப்படும் பணம் தவறாகப் பாவிக்கப்படல்

உள்ளூராட்சி மன்றங்கள் அமைத்துருவாக்கப்பட்ட கட்டளைச் சட்டங்களின் கீழ், உள்ளூராட்சி மன்றத்துக்கு அறவிட்டுக் கொள்ளக் கூடிய வருமானங்களை விரைவாக அறவிட்டுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் களத்துக்குச் சென்று அறவிடப்படும். சில உள்ளூராட்சி மன்றங்களால் இப் பணிக்கென ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் களத்தில் பணம் சேகரிக்கப்படும் போது கீழ்க்காட்டப்பட்டுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையில், கீழ்க் காட்டப்பட்டுள்ள தகவல்கள் வெளிவந்துள்ளன.

i. உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறவிட வேண்டிய, வருமானங்களைக் களத்திற்குச் சென்று பணத்தைச் சேர்த்துக் கொண்டு வருவதற்காக வருமான பரிசோதகருக்கு 3 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் ஒரே தடவையில் வழங்கப்பட்டிருந்தன.

ii. களத்தில் சேகரிக்கப்பட்ட பணத்தை, 10, 20, 26 நாட்கள் வரையான காலப்பகுதியில் தம்மிடம் வைத்திருந்து தாமதமாக அலுவலகத்திடம் ஒப்படைத்தல்.

iii. வியாபார அனுமதிக் கட்டணம், வர்த்தக வரி மற்றும் கைத்தொழில் வரி ரீதியாக அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தின் அளவு அதிகரித்திருத்தல்.

iv. கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதிகார பிரதேசத்திலுள்ள குத்தகையின் கீழான வியாபாரத் தலங்களின் அளவு ஆண்டுக்கு ஆண்டு, படிப்படியாகக் குறைந்து செல்லும் சாத்தியத்தைக் காண முடிதல்.

v. களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப சில வர்த்தகர்களால் வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தி தமக்கு வருமான உத்தியோகத்தர் வழங்கும் பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்ததுடன், அப்பற்றுச்சீட்டு உள்ளூராட்சி மன்றத்தால் வருமானப் பரிசோதகருக்கு அளிக்கப்படாத பற்றுச்சீட்டுப் புத்தகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்ற விடயம் அவதானிக்கப்பட்டிருத்தல்.

vi. வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம், கைத்தொழில் வரி, மற்றும் வர்த்தக வரி என்ற ரீதியில் பாரிய பணத்தொகை அறவிடப்பட வேண்டியதாக இருப்பினும், அதனைச் செலுத்தாது தவிர்க்கப்பட்டுள்ள வரி/கட்டணங்களை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாதிருத்தல்.

vii. சில சந்தர்ப்பங்களில் நுகர்வோரால் முன்வைக்கப்பட்ட பணப் பற்றுச் சீட்டுக்களுடன் காரியாலயத்தில் அதற்கு ஏற்புடையதான புத்தகத்தில் உள்ள

பிரதியை ஒப்பிட்டுப் பார்க்கும் போது பற்றுச்சீட்டுடன் வழங்கப்பட்டுள்ள திகதிகளில் பரஸ்பர முரண்பாட்டு நிலை காணப்பட்டது.

மேலே காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக ஆரம்ப விசாரணையொன்று நடத்தப்பட்டதுடன், அங்கு கீழ்க்காட்டப்பட்டுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்பது உறுதியாகியுள்ளது.

1.2 இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள்

i. களத்தில் அறவிடப்பட்ட பணம் 10, 20, 26, நாட்கள் என்ற ரீதியில் தாமதிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதன் பேரில் வருமான பரிசோதகர் சபையின் நிதியைத் தற்காலிகமாக தவறான பாவனைக்கு உள்ளாக்கியிருத்தல்.

ii. வருமானப் பரிசோதகரால் அச்சிடப்பட்ட சபைக்குரியது அல்லாத பற்றுச் சீட்டுப் புத்தகங்களைப் பாவித்து பணம் அறவிடப்பட்டிருத்தல், மற்றும் அப்பணத்தை சபையிடம் கையளிக்காது தனிப்பட்ட பாவனையில் ஈடுபடுத்தியிருத்தல். அதற்கேற்ப அவர் போலியான ஆவணங்களைத் தயாரித்திருத்தல் மற்றும் நிதி முறைகேடுகளை மேற்கொண்டிருத்தல்.

iii. வருமானப் பரிசோதகருக்கு, களத்தில் வருமானத்தைச் சேகரிப்பதற்காக ஒரே தடவையில் 3 புத்தகங்கள் வழங்கப்பட்டிருத்தல் மற்றும் இதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்து பூர்த்தியாகியிருந்த பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் சிலவற்றைக் காரியாலயத்திடம் கையளிக்காதிருந்தமை.

iv. சேகரித்த பணத்தை கையளித்தல், மற்றும் அறவிடல் தொடர்பில் உள்ளக நிருவாகம், வலுவற்ற மட்டத்தில் காணப்படுதல் மற்றும் அதனோடு தொடர்புடைய, உரிய மேற்பார்வை இல்லாதிருத்தல்.

v. பணத்தை அறவிடுகையில் ஒருபக்க காபன் கடதாசிகள் பாவிக்கப்பட்டிருத்தல்.

vi. ஆரம்ப விசாரணையில் வெளிவந்துள்ள விடயங்களுக்கு ஏற்ப, இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள், முறைகேடுகள் மற்றும் போலி ஆவணங்களைத் தயாரித்ததன் மூலம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூ.24,800/- அல்லது அதனை அண்மித்த பணத்தொகை, வருமானப் பரிசோதகரால் தவறாகப் பாவனைக்கு உள்ளாக்கப்பட்டிருத்தல்.

1.3 ஒழுங்கீனங்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்.

i. களத்தில் பணத்தைச் சேகரித்தல் (நடமாடும் சேவை) தொடர்பில் பற்றுச்சீட்டுப் புத்தகங்களை வழங்கும் போது ஒரே தடவையில் ஒரு புத்தகத்துக்கு மேலதிகமாக வழங்கப்படாதிருப்பதில் கவனமெடுத்தல்.

ii. அவ்வாறே புதிதாக பற்றுச்சீட்டுப் புத்தகமொன்றை வழங்கும் போது அதற்கு முன்னர் வழங்கப்பட்டு பாவனைக்கு எடுக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட

DRAFT

புத்தகங்களைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பற்றுச் சீட்டுப் பாவனைக்குரிய உள்ளக நிருவாகத்தை ஒழுங்குபடுத்துதல்.

iii. புத்தகங்களை வழங்கும் போதும் மீண்டும் பெற்றுக் கொள்ளும் போதும் உரிய திகதிகள் மற்றும் கையளிக்கப்பட்ட/பெற்றுக் கொள்ளப்பட்டது, என்பதற்கு உரிய குறிப்புகள் பற்றுச்சீட்டுப் புத்தகம் வழங்கப்படும் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக பற்றுச் சீட்டுகள் தொடர்பான உள்ளக நிருவாகத்தை ஒழுங்குபடுத்தல்.

iv. களத்தில் சேகரிக்கப்பட்ட பணம், சேகரிக்கப்பட்ட திகதியிலேயே கையளிக்கப்பட வேண்டும் என உத்தரவிடல், ஏதேனுமொரு நியாயமான காரணத்தின் அடிப்படையில், கையளிக்கப்பட முடியாது போயின், பணம் சேகரிக்கப்பட்ட திகதியின் பின்னர் வரும் பணித் திகதியில், கட்டாயமாக கையளிக்கப்பட வேண்டும் என வருமானப் பரிசோதகருக்கு எழுத்து மூலம் உத்தரவிடல்.

v. பணத்தைப் பெற்றுக் கொண்டு பற்றுச் சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இருபக்க காபன் கடதாசியைப் பாவிக்க வேண்டியிருத்தல்.

vi. குறிப்பாக வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்/வர்த்தக வரி/கைத்தொழில் வரி ஆகிய வருமானங்களை அறவிடுகையில் உரிய பணத்தைச் செலுத்துமாறு குத்தகைக் காரருக்கு அறிவித்த பின்னர், 14 நாட்களுக்குள் அப் பணத்தைச் செலுத்தாவிடில் எழுத்து மூலச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

vii. வருமானப் பரிசோதகர் அல்லது வேறு பணம் சேகரிப்பவரால் உரிய பணம் காரியாலயத்துக்குக் கையளிக்கப்படும் போது அவர்களால் முன்வைக்கப்படும் அட்டவணை மற்றும் பற்றுச் சீட்டுப் புத்தகத்தைப் பரீட்சித்தல் பணத்தைக் கையேற்பவரின் பணிப் பொறுப்பாகும். அவ்வாறு பணத்தைப் பொறுப்பேற்கும் போது பற்றுச் சீட்டுப் புத்தகத்திற்கேற்ப, பற்றுச் சீட்டு வழங்கப்பட்டுள்ள திகதி, மற்றும் பணத்தைக் கையளித்த திகதி பற்றிப் பரீட்சிப்பதும், அவ்வாறு பரீட்சித்த பின்னர் பற்றுச் சீட்டுப் புத்தகத்தின் இறுதிப் பற்றுச் சீட்டின் பின்புறம் பணத்தைப் பொறுப்பேற்ற நபரால் பரீட்சிக்கப்பட்டது என உரிய திகதியும் தமது கையெழுத்தையும் இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

viii. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அன்ட்ரொய்ட் டப்களைப் பாவித்தல் மற்றும் இணையத்தளக் கொடுப்பனவுகள் (Online payment) ஆகிய வழிமுறைகள் ஊடாக பணத்தை அறவிடுவதற்கும் செலுத்துவதற்கும் வசதிகளை ஏற்படுத்தல். அதன் மூலம் இடம்பெறக் கூடிய ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகளைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

ix. நிதியாண்டு பூர்த்தியாவதற்கு முன்னர், டிசம்பர் 31ம் திகதியில், அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து வியாபார வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்பிலான கிராமசேவகர் பிரிவு மட்டத்தில் ஆய்வொன்றை நடத்தல்.

DRAFT

x. ஆய்வின் பின்னர் இனங்காணப்பட்ட வியாபார, வர்த்தகங்களைக் கீழ்க்காட்டப்படும் 3 வகைகளாகப் பிரித்து அதற்கென 3 ஆவணங்களைப் பேணுதல்.

- வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணங்களின் கீழான வர்த்தகங்கள்
- கைத்தொழில் வரியின் கீழான வர்த்தகங்கள் அல்லது தொழில்கள்
- வியாபார வரியின் கீழான வியாபாரம்/வர்த்தக/வேலைத் தளங்கள்.

xi. இனங்காணப்பட்ட வியாபாரங்களுக்குரிய வரிகள்/கட்டணங்களை 14 நாட்களுக்குள் செலுத்துமாறு உரிய வியாபாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்தல்.

xii. அத்துடன், களத்திற்குச் சென்று வரிகள் மற்றும் கட்டணங்களைச் சேகரிக்கும் நடமாடும் சேவைகளை நடத்திச் செல்லுதல்.

xiii. தொடர்ந்தும் கட்டணம் செலுத்தத் தவறியிருப்பின் உரிய குத்தகைக்காரர்களுக்கு SMS ஊடாக நிலுவை அளவுகளைக் குறிப்பிட்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், உரிய பணத்தைச் செலுத்துமாறு அறிவித்தல்.

xiv. அதன் பின்னர் கட்டணங்களைச் செலுத்தத் தவறும் நபர்களுக்கு எதிராக எழுத்து மூலச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டு உரிய பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.

xv. களத்தில் பணத்தைச் சேகரித்தல் மற்றும் கையளித்தல் தொடர்பில், நெருங்கிய அவதானிப்பை மேற்கொள்ள வேண்டியதுடன், அதனோடு தொடர்புடைய உள்ளக நிருவாகத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

xvi. வருமானங்களை அறவிடல் பற்றிய உள்ளக கணக்காய்வு ஒன்றின் மூலம் பரீட்சித்துப் பார்த்து மாதாந்தம் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு உத்தரவிடல் மற்றும் மாதாந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

xvii. பணம் சேகரிப்பவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி மற்றும் சொத்துக்களுக்குப் பொறுப்பாக அலுவல்கள் மேற்கொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் நிதி மற்றும் உள்ளூராட்சி விதிகளுக்கேற்ப, போதுமான பணத்தைப் பிணையாகப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

xviii. ஒட்டுமொத்த பணிக்குழுவுக்கும் முறையான நிபந்தனைகள் உள்ளடங்கிய பணிப் பட்டியலொன்று மற்றும் தொழில் விபரமொன்றை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

xix. ஒரு ஊழியரின் அல்லது உத்தியோகத்தரின் பணிப் பொறுப்பைத் தவறவிடுதல், கவனயீனமாகச் செயற்படல் மற்றும் நிதி அல்லது சொத்துக்களைத் தவறான பயன்பாட்டுக்குப் பாவிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் நிச்சயமாகத் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

DRAFT

## 2. முறையற்ற ரீதியில் ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தொழில்களுக்கு பணம் வழங்கியிருத்தல்

இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகள்

உள்ளூராட்சி நிறுவனங்களால் நிர்மாண வேலைகள் தொடர்பில் விலை மனுக் கோரும் போது மற்றும் வழங்கும் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக் கோரல் நடைமுறை மற்றும் சுற்றுநிருப ஆலோசனைகளுக்கு ஏற்ப அதனை நிறைவேற்ற வேண்டியுள்ளது. எனினும் யஹபுர எனப்படும் உள்ளூராட்சி மன்றத்தால், தமது அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு பாதையில் 300 அடி அளவிலான கொங்கிறீட் பாதையை அபிவிருத்தி செய்வதற்காக ரூ,675,000/- பணம் செலவிடப்பட்டுள்ளது. இவ் நிர்மாண வேலையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கிடைத்த முறைப்பாடொன்றுக்கு ஏற்ப, ஆரம்ப விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதுடன் அவ் விசாரணையில் கீழ்க்காட்டப்படும் விடயங்கள் வெளிவந்தன.

i. உரிய பாதை அபிவிருத்தி செய்யப்படும் தேவை தொடர்பில் சபையின் உறுப்பினர் ஒருவரால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ii. பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அக் கட்டுமாணம் அப் பிரதேசத்தின் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துக்கு மதிப்பிடப்பட்ட பணத்துக்கு நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. மேற்படி சங்கத்தின் உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்டு சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளரால் கையெழுத்திடப்பட்ட நிர்மாண ஒப்பந்தம் உரிய கோப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

iv. ஆரம்ப விசாரணையில் சம்பவம் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட கூற்றொன்றுக்கு ஏற்ப, சங்கம் தனது விருப்பின் பேரில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை எனவும், உரிய பிரதேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களின் (மக்கள் பிரதிநிதிகளின்) கோரிக்கையின் பேரில் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது என்ற விடயங்களும் வெளிந்தன.

v. குறித்த நிர்மாணத்தினை ஆரம்பிப்பதற்கான பணபலம் சங்கத்திடம் இல்லாதிருந்ததுடன், உரிய வேலைத்திட்டம் குறித்த மக்கள் பிரதிநிதியினால் செயற்படுத்தப்படுவதாகவும், அவரால் சங்கத்துக்கு வாய்மொழி மூலம் சொல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

vi. அச்சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்துவதற்குப் போதுமான பணபலம் குறித்த மக்கள் பிரதிநிதிக்கு / உறுப்பினருக்கு இல்லாதிருந்ததால் சில மாதங்ககளாக வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்க முடியாமல் போயுள்ளது.

vii. பின்னர் குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதி / உறுப்பினர் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் கலந்துரையாடி இந்த வேலைத்திட்டத்தினை ஒரே நாளில் முடித்து விடக் கூடியதாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

DRAFT

viii. பின்னர் ஒரு நாளைக்குள் அந்த வேலைத்திட்டத்தினைப் பூர்த்தி செய்யும் வாய்மொழி மூல இணக்கத்திற்கு ஏற்ப, உரிய வேலைத்திட்டம் சரியான தரத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், மேற்குறிப்பிட்ட திட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன எனவும் குறிப்பிட்ட நிர்மாணிப்பு வேலைக்குரிய பற்றுச் சீட்டை தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் தயாரித்து, அளவீட்டுப் பத்திரங்களும் தயாரிக்கப்பட்டு நிர்மாணிப்புத் தொடர்புடைய மொத்தப் பணமும் கொந்தராத்துச் சங்கத்துக்குச் செலுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

ix. சங்கத்தின் பெயரில் வழங்கப்பட்டிருந்த காசோலை சங்கத்தால் மாற்றப்பட்டு உரிய மக்கள் பிரதிநிதிக்கு / உறுப்பினருக்கு வழங்கப்பட்டதெனவும், சங்கத்தின் பொருளாளரின் கூற்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

x. மேற்குறிப்பிட்டது போன்று பணத்தைச் செலுத்தி 4 மாதங்கள் செல்லும்வரை வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

xi. நிர்மாண வேலைகளை துரிதமாக முடிப்பதாகக் கூறிக்கொண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஒத்துழைப்பின் பேரில் உரிய மக்கள் பிரதிநிதிக்கு / உறுப்பினருக்கு அவ் நிர்மாண வேலையுடன் தொடர்புடைய தடுத்துவைத்த பணம் / பிடிகாசினையும் விடுவித்துள்ளார்.

xii. ஆரம்ப விசாரணைகளுக்கு ஏற்ப நடத்தப்பட்ட களப் பரிசோதனையில் முன்வைக்கப்பட்ட சாட்சிகளுக்கு ஏற்ப, சங்கத்தால் நிர்மாண ஒப்பந்தத்தில் மக்கள் பிரதிநிதியின் / உறுப்பினரின் கோரிக்கையின் பேரிலேயே சங்கம் கையெழுத்திட்டுள்ளதாகவும் உரிய ஆவணங்கள் மக்கள் பிரதிநிதியால் / உறுப்பினரால சங்கத்துக்குக் கொண்டுவந்து கையளிக்கப்பட்ட பின்னர் அதில் கையெழுத்திட்டதாகவும், மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தினைச் சங்கம் செயற்படுத்தவில்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2.1 இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்களும், முறைகேடுகளும்.

i. விலைமனுக்கோரல் பத்திரங்களுடன் தொடர்புடைய தேவைகள் நிறைவேற்றப்படாதிருக்கையில், அதாவது உரிய வேலைத்திட்டத்திற்கான வரவுசெலவு ஒதுக்கங்களை ஏற்பாடு செய்துகொள்ளாமல் நிர்மாண ஒப்பந்தத்துக்கு முன்வந்திருத்தல்.

ii. விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர், கொந்தராத்துக்கு உரிய ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை மக்கள் பிரதிநிதியின் / உறுப்பினரின் கையில் ஒப்படைத்து சங்கத்தின் இலச்சினை மற்றும் கையெழுத்தைப் பெற்றுக் கொள்ளுதல் மக்கள் பிரதிநிதியினாலேயே / உறுப்பினராலேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதன் அடிப்படையில், விடயத்துக்குப்

DRAFT

பொறுப்பான இலிகிதர் முறையற்ற விதத்தில் நடவடிக்கை எடுத்திருப்பது மற்றும் பணிப் பொறுப்பைத் தவறவிட்டிருத்தல்.

iii. நிறைவேற்றப்படாத தொழிலொன்றை உரிய தரத்திற்கேற்ப, பூர்த்தி செய்திருப்பதாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் போலியாகவும் திருட்டுத்தனமாகவும் ஆவணங்களைத் தயாரித்திருத்தல் மற்றும் இரண்டாவதாக, உரிய வேலைத்திட்டத்திற்கான பிடிபணத்தினை விடுவிப்பதற்குத் தவறான அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

iv. விடயத்துக்குப் பொறுப்பான இலிகிதரால் குறித்த வேலைத்திட்டம் தொடர்புடைய கொடுப்பனவுக் காசோலை நேரடியாக மக்கள் பிரதிநிதிக்கு / உறுப்பினருக்கு கையளிக்கப்பட்டதன் மூலம் தவறு செய்திருத்தல்.

v. சபைச் செயலாளர் காசோலையில் கையெழுத்திடல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தராக உரிய கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முன்னர், குறித்த வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை களப் பரிசோதனை ஒன்றின் ஊடாக உறுதிசெய்து கொள்ளாமல் கொடுப்பனவுக் காசோலையில் கையெழுத்திட நடவடிக்கை எடுத்த அவரது கவனயீனம் மற்றும் அவதானிப்பற்ற நிலையின் அடிப்படையில் சபை நிதியத்துக்கு ரூ.675,000/-க்கான பண நட்டத்தை ஏற்படுத்தல்.

vi. ஒப்பந்தம் மற்றும் உரிய பெறுமதி மற்றும் கொந்தராத்துக்காரர்களின் பெயர்களை சபையின் அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தாதிருத்தல்.

2.2 ஒழுங்கீனங்களையும் முறைகேடுகளையும் தடுப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

i. எந்தவொரு வேலைத்திட்டமும் விலைமனுக்கோருவதற்கு அல்லது ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு முன்னர் அவ் வேலைத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு வரவுசெலவு ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கவனம் செலுத்துதல்.

ii. வேலைத்திட்டத்திற்குரிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதுடன் தொடர்புடைய கொந்தராத்துக்காரர்களை சபைக்கு அழைத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர், செயலாளர் முன்னிலையில் சபையின் பொது இலச்சினையைப் பொறித்து இரு தரப்பினரால் ஒப்பந்தம் கையெழுத்திடப்படல்.

iii. பொதுச் சபையில் நிர்மாணிக்கப்படுவதற்கென அனுமதிக்கப்படுகின்ற விபரங்களை சபையின் அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தல்.

iv. ஒப்பந்தம் செய்யப்படுகின்ற கருத்திட்டங்களின் பெயர்கள், பெறுமதிகள், மற்றும் கொந்தராத்துக்காரர்களின் பெயர்களை சபையின் அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தல்.

v. ஒப்பந்தம் செய்யப்படுகின்ற கருத்திட்டங்களின் பெயர்கள், பெறுமதிகள், மற்றும் ஒப்பந்தகாரர்களின் பெயர்களை குறித்த வேலைத்தளத்தில் காட்சிப்படுத்தல்.

## 3. சொத்துக்களைத் தவறான முறையில் பாவித்தல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள்

ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தரான சபைச் செயலாளரின் ஆலோசனையின் பேரில் பணிக்குழு உத்தியோகத்தர்கள் சிலர் திருமண வைபமொன்றில் கலந்து கொண்டுள்ளனர். அலுவலக நாளொன்றில் கலந்து கொண்டுள்ள இத் திருமண நிகழ்வு தொடர்பில் கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

i. சபையின் இலக்கம் XY-0007 க்கான கப் வண்டி இத் திருமண விழாவிற் பங்கேற்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ii. கப் வண்டியின் சாரதி இத் திருமண விழாவில் கலந்துகொள்ளும் தேவையின் பேரில் சம்பவ தினத்தன்று தனிப்பட்ட விடுமுறையொன்றை விண்ணப்பித்துள்ளார்.

iii. உரிய தினத்தில் திருமண வைபத்தில் தாமும் கலந்து கொள்ள வேண்டியிருந்ததால் செயலாளர் சாரதியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விடுமுறை விண்ணப்பத்தை அனுமதிக்காதிருக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

iv. செயலாளரால் விடுக்கப்பட்ட ஆணைக்குக் கட்டுப்பட்டு சாரதி, செயலாளர் உள்ளிட்ட இன்னும் சில உத்தியோகத்தர்களுடன் உரிய திகதியில், பகல் வேளையில், கடமைக்குப் புறம்பான அலுவலான, திருமண வைபவத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

v. அன்றைய தினம் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட சாரதி மது அருந்தியிருந்தார்.

vi. பகல் உணவின் பின்னர் மீண்டும் அலுவலகத்துக்குச் செல்வதற்கு செயலாளர் விடுக்கப்பட்ட உத்தரவு, சாரதியால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

vii. பின்னர் செயலாளர் ஏனைய உத்தியோகத்தர்களுடன் வேறொரு வாகனத்தைப் பயன்படுத்தி மீண்டும் அலுவலகத்துக்கு வந்துள்ளனர்.

viii. செயலாளரின் பொறுப்பின் கீழான சபைக்குச் சொந்தமான சொத்தான கப் வண்டியை சபை அலுவலகத்துக்கு அச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் செல்வதில் செயலாளர் தோல்வியடைந்துள்ளார்.

ix. மது அருந்தியிருந்த சாரதி தனது சுய விருப்பத்திற்கேற்றவாறு அன்றைய தினம் திருமண வைபவத்துக்கு வந்திருந்த சபையின் தொழிலாளர் ஒருவரை அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக கப் வண்டியைச் செலுத்திச் சென்றுள்ளார்.

x. இவ்வாறு பயணிக்கையில் மதுபோதையில் இருந்த சாரதியால் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியிலிருந்து விலகியிருந்த வேறொரு கட்டிடத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

xi. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, வாகன விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் பின்பற்றப்பட வேண்டிய பொதுவான விதிமுறைகளுக்கு முரணாக, விபத்து

DRAFT

இடம்பெற்ற இடத்திலிருந்து கப் வண்டி அப்புறப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

xii. சாரதி வண்டியை அப்புறப்படுத்துவதற்காக சபையின் முன்னாள் தலைவரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

xiii. முன்னாள் தலைவர், தமது சுயவிருப்பிற்கேற்ப, சபையின் கப் வண்டியை அவரது வேலைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

xiv. இச் சம்பவம் சபையின் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர் இன்னொரு சாரதியின் மூலம் கப் வண்டி சபைக் காரியாலயத்திற்குக் கொண்டுவரப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

xv. மேற்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் பொலிசாருக்குக் கிடைத்த முறைப்பாடொன்றுக்கு ஏற்ப, பொலிசாரால் கப் வண்டி பொலிசாரின் பொறுப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

xvi. இச்சந்தர்ப்பத்தில் மது அருந்தியிருந்த சாரதி தனக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியொன்றில் தப்பியோடிக் கொண்டிருக்கும் போது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளனர்.

xvii. விபத்துக்குள்ளான கப் வண்டியைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு 550,000/- ரூபா செலவை ஏற்க வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

xviii. மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய காரணத்தால் இடம்பெற்ற விபத்து என தெரியவந்ததன் பேரில் காப்புறுதி நட்டஈட்டுக் கொடுப்பனவும் மறுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளில் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் மற்றும் பௌதீக சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கேற்ப, சபைக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதன் மூலம் உள்ளூராட்சி மன்றத்துக்கு நட்டமும் இழப்பும் ஏற்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

3.1 இச்சம்பவத்தின் மூலம் இடம்பெற்றுள்ள தவறுகள் மற்றும் ஒழுங்கீனங்கள்

i. உள்ளூராட்சி மன்றத்துக்குச் சொந்தமான கப் வண்டியை தமது தனிப்பட்ட தேவைக்காகப் பாவித்ததால் சபைச் செயலாளர் பொதுச் சொத்துக்களைத் தவறாகப் பாவனைக்கு உட்படுத்தியிருத்தல்.

ii. மது அருந்திவிட்டு வாகனத்தைச் செலுத்தியிருத்தல்

iii. சபையின் உத்தியோகத்தர் அல்லாத ஒருவருக்கு சபைக்குச் சொந்தமான வளங்களைத் தவறாகப் பாவிப்பதற்கு இடமளித்தல்.

iv. உள்ளூராட்சி மன்றத்தின் சொத்துக்களுக்கு ரூபா 550,000/- மற்றும் அதனை அண்மித்த தொகைக்கான பண நட்டத்தை ஏற்படுத்தியிருத்தல்.

DRAFT

v. கடமை புரியும் கால எல்லையில் தமது தனிப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டு, தாபனக் கோவையின் ஏற்பாடுகளை மீறி தவறு செய்திருத்தல்.

3.2 மேலே காட்டப்பட்டுள்ளவாறு ஒழுங்கீனங்கள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

i. உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பாவனை மற்றும் பயன்படுத்துவதற்குரிய ஆணைகள் குறிப்பிடப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சுற்றுநிருபங்கள் ஊடாக தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

ii. சபைக்குச் சொந்தமான வாகனங்கள் பாவனை தொடர்பில் உரியவாறு மேற்பார்வை செய்தல்.

iii. மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துதல் தொடர்பில் தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப, உரிய தண்டனை விதித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல்

iv. ஊழியர்கள்/உத்தியோகத்தர்களின் நலன்புரித் தேவைகளுக்காக சபை நிதியை செலவிடக் கூடாது எனவும் அதற்கு சபை உத்தியோகத்தர்களின் நலன்புரி நிதியத்தை வலுப்படுத்த வேண்டும் எனவும், தேவையான ஆலோசனைகள் உள்ளூராட்சி நிறுவனத்துக்கு வழங்கப்படுதல்.

v. சபை நிதியத்துக்கு நேர்ந்துள்ள பண நட்டம் மற்றும் இழப்பு என்பவற்றை அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

vi. மேற்குறிப்பிட்ட ஒழுங்கீனங்கள் மற்றும் தவறுகள் செய்யப்பட்டிருப்பதன் அடிப்படையில் சபையின் பிரதான நிருவாக உத்தியோகத்தரான செயலாளருக்கும் கப் வண்டியின் சாரதிக்கும் எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.

**4. சபைக்குச் சொந்தமான பொருட்கள் காணாமல் போதல்**

உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடமொன்றை மீள்நிர்மாணம் செய்வதில் இடம்பெற்ற முறைகேடுகள் பற்றிய சம்பவக் கற்கையொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

X எனப்படும் உள்ளூராட்சி மன்றம் வசமுள்ள வர்த்தகத் தொகுதியொன்றின் கூரையைப் புதுப்பிப்பது தொடர்பில் கிடைத்த முறைப்பாடொன்றுக்கு ஏற்ப, ஆரம்ப விசாரணையொன்று இடம்பெற்றுள்ளது. அவ் விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட வாய்மூல/ஆவணப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் பௌதீக பரிசோதனையின் போது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப, கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

DRAFT

4.1 அவதானிப்புத் தகவல்கள்

i. மத்திய சந்தையின் கூரையை புதுப்பிக்கும் போது கூரையிலிருந்து கழற்றி அகற்றப்பட்ட 2x4 மற்றும் 2x6 அளவிலான மரம், ஒழுங்கான முறையில் கணக்கிடப்படாமல் மத்திய சந்தைப் வளாகத்திலேயே ஒருபுறத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கான பொறுப்பு யாருக்கும் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. பின்னர் மேற்குறிப்பிட்ட மரத்தின் அளவு கணக்கிடப்பட்டு உள்ளூராட்சி நிறுவனத்துக்குச் சொந்தமான வேறொரு இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும் எனவும், அம்மரத் தொகை சரியாக அளவிடப்பட வேண்டும் எனவும், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு சபைச் செயலாளரால் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

iii. தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உரிய மரத் தொகுதியின் அளவு மாத்திரம் கணக்கிடப்பட்டு உள்ளூராட்சி மன்றத்துக்குச் சொந்தமான வாகனமொன்றின் மூலம் வேறொரு இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இங்கு மரத்தின் குறித்த நீளம், அகலம் மற்றும் அடர்த்தி உள்ளடங்குமாறு அளவீடொன்று தொழில்நுட்ப உத்தியோகத்தரால் நடத்தப்பட்டுள்ளது.

iv. அவ்வாறே சபையின் களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட இடத்தின் காவற் கடமைகளில் ஈடுபட்டிருந்த காவலாளிகளின் பங்களிப்புடன் அல்லது அவர்களுக்குத் தெரியாமல் இம் மரத் தொகை இன்னொரு இடத்துக்கு எடுத்துச் சென்று களஞ்சியப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

v. எவ்வாறாயினும் முதலில் களஞ்சியப்படுத்தியிருந்த இடத்திலிருந்து அகற்றி மீண்டும் களஞ்சியப்படுத்தப்பட்ட இடத்தில் களஞ்சியப்படுத்தி மரத்தின் அளவு எவ்வளவு என்பது களஞ்சியப் பொறுப்பாளர் அல்லது காவலாளி ஊடாக உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

vi. தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒழுங்கற்ற முறையில் முதலில் கணக்கிடப்பட்ட அளவு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிக்கையிட்டதன் பின்னர் அது களஞ்சிய இருப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

vii. ஆரம்ப விசாரணையில் களஞ்சிய இருப்பில் மேலுள்ளவாறு உள்ளடக்கப்பட்டிருந்த மரத்தின் தொகை மற்றும் இரண்டாவது முறையாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்த மரத்தின் அளவு பௌதீக ரீதியாகப் பரிசோதித்துப் பார்க்கப்பட்ட போது வெவ்வேறு நீள அளவுகளுடன் கூடிய 2x4 அளவிலான 154 கூரை முகட்டுத் தடிகள் காணாமல் போய் இருந்தது உறுதியாகியுள்ளது.

4.2 மேற்குறிப்பிட்ட செயற்பாட்டின் மூலம் இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் மற்றும் தவறுகள்

i. மத்திய சந்தைக் கூரையிலிருந்து அகற்றப்பட்ட மரத்தின் அளவு கணக்கிடப்பட்டு, ஒழுங்கான முறையில் களஞ்சியசாலைக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கவனமின்றியும் அவதானமின்றியும் நடந்திருத்தல்

ii. பொருட்கள்/பண்டங்களை அகற்றுதல், போக்குவரத்து அல்லது களஞ்சியப்படுத்துவதுடன் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தரான செயலாளரால் அதனோடு தொடர்புடைய உள்ளக நிருவாகத்தை உறுதியாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை.

iii. பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப, 2x4 அளவிலான 154 முகட்டுத் தடிகள் அல்லது அதனை அண்மித்த அளவிலானவை திருடப்பட்டு அல்லது காணாமற் போயிருத்தல் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத்துக்கு நிதி ரீதியான நட்டம் இழைக்கப்பட்டிருத்தல்.

DRAFT

4.3 இவ்வாறான ஒழுங்கீனங்கள் அல்லது முறைகேடுகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதற்கு எடுக்க வேண்டிய நடைவடிக்கைகள்.

i. உள்ளூராட்சி மன்றத்தின் ஒவ்வொரு ஊழியரும்/உத்தியோகத்தரும் அவர்கள் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகள், பொறுப்புகள் உள்ளடங்குமாறு பணிப் பட்டியலொன்று மற்றும் தொழில் விபரமொன்றை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

ii. பிரதேசிய சபைகள் நிதி மற்றும் உள்ளூராட்சி விதிகள்/சுற்றுநிருப ஆலோசனைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு பண்டங்கள்/பொருட்கள் கொள்வனவு/வழங்கல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான உத்தரவுகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என உரிய பணிக்குழுவை அறிவூட்டல்.

iii. காவல் சேவையில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கு குறிப்பிட்ட வேலைத் தளத்திலுள்ள பண்டங்கள், பொருட்கள் மற்றும் சொத்துக்களின் பொறுப்பை எழுத்து மூலமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iv. உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நிருவாக உத்தியோகத்தரால், உள்ளூராட்சி நிறுவனத்துக்குச் சொந்தமான வளங்கள் மற்றும் சொத்துகள் நிருவாகம் தொடர்பில் உரிய அவதானத்தைப் பேணிச் செல்லுதல்.

v. களஞ்சியப் பொருட்களின் தொகையை கணக்கெடுத்தல் தனி நபரொருவரால் மேற்கொள்ளப்படக் கூடாததுடன் அது குழுவொன்றின் மூலம் நடத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

vi. நிதி மற்றும் நிருவாக விதிகளுக்கு அமைவாக பிரதான நிருவாக உத்தியோகத்தரின் எழுத்துமூல உத்தரவின்றி எந்தவொரு பொருளையும் வழங்கவோ வெளியேற்றவோ நடவடிக்கை எடுக்காதிருத்தல்.

vii. சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் பாவிக்கப்பட வேண்டிய விதத்தைக் காட்டும் இலகுவான குறிப்புகளுடன் கூடிய வழிகாட்டல் கோவையொன்றை அல்லது எளிமையான ஆவணமொன்றை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

DRAFT